ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

निराकरिष्णुर्यदि नोपलभ्यते भवष्यति क्षान्तिरनाश्रया कथम् ।
यदाश्रयात् क्षान्तिफलं मया ऽऽप्यते स सत्कृतिं कामिह नाम नार्हति ॥

"நிராகரிப்பவன் ஒருவன் தென்படாவிடில் க்ஷாந்தி (பொறுமை) என்பது ஆசிரயமின்றி எப்படியிருக்கும். எவனொருவனை யாசிரயித்து பொறுமையின்பயன் நம்மால் அடையப்படுகின்றதோ, அவனுக்கு எவ்வளவு ஸத்காரம் செய்தாற்றான் தகாது"? கண்டவிடத்திலோ, காணுவிடத்திலோ அதிக்ஷேபமாய்ப் பேசியும், அநீதமாய் நடந்தும், இவ்வாறே பல அக்கிரமங்களைச் செய்துகொண்டிருப்பவனைப்பற்றி கேழ்விப்படும்பொழுதேனும், அல்லது அவனை நேரில் காணும்படி நேர்ந்தபொழுதேனும், எவனது சித்தம் விகாரப்படாமல் பொறுமையுடன் அடங்கியிருக்குமோ; அவன்தான் பொறுமையின் பயனையடைந்தவன் எனலாம். ஒருவரும் அவதூராய்ப் பேசாதபோது சாந்தநிலையிலிருப்பவனைப் பொறுமையுள்ளவனென்று எப்படிச் சொல்லமுடியும். பொறுமையிருக்கிறதா? இல்லையா என்பதை நிராகரித்துப் பேசுகிறவன் முன்னிலையிற்றான் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும். அப்படியொருவன் தென்படாதபக்ஷத்தில் பொறுமை பாராட்டுவதற்கிடமில்லாமையால் பொறுமையிருப்பதாகக் கண்டுபிடிப்பதெப்படி? சுவர்ணத்தின் உயர்ந்த மாத்தைக்காட்டும் உரைகல்போல் பொறுமையின் பெருமையை விளக்கிக்காட்டுபவன் அவதூராகப் பேசி, அக்கிரமமாக நடப்பவனேயாவன். அப்படியொருவன் தென்படுவானேயாகில் நம் பொறுமையைப் பிரகாசப்படுத்தியவனல்லவா இவன்? இவனுக்கு நாம் எவ்வளவு வெகுமதி செய்தாற்றான் தகாது, என்று அவனைக் கண்டதும் நன்றிபாராட்டவேண்டும். ஆத்தும குணங்களெல்லாம் பொருந்தியவர்களுக்கே இத்தகைய மேலான தன்மை கிடைப்பது அரிது. பரம ஸாத்துவிகசிகாமணியான ஒருவருக்குத்தான் இருக்கும். அதைப்பார்த்து எல்லோரும் பழகிக்கொள்ளவேண்டும். பிரயாஸப்பட்டாவது இந்த உத்தம குணத்தை எல்லோருமே சம்பாதித்துக்கொள்வார்களானல் துவேஷப்பேச்சே நாட்டில் நடமாடாது. பூர்வ காலத்தில் நம் பெரியோர்கள் பொறுமையைப் பெரும் பூஷணமாகப் பூண்டிருந்தபடியால் பரஸ்பர த்வேஷமில்லாமல் பரஸ்பரம் ஸஹாயம் செய்துகொண்டு லோக க்ஷேமத்திற்காகவே தங்களுடைய தபஸ் முழுவதையும், ஆயுள் பூராவும் உபயோகித்துவந்திருக்கிறார்கள். அவர்களுடைய தபோவலிமையைக் கேட்டால் உலகத்தையே எப்படி எப்படி வேண்டுமோ அப்படியெல்லாம் மாற்றிவிடக்கூடிய சக்தி அவர்களுக்குப் பரிபூரணமாயிருந்ததென்பது அவர்களுடைய சரித்திரத்தைப் படித்திருப்பவர்களுக்கு ஸ்பஷ்டமாகப் புலப்படக்கூடியதே. தற்காலத்திலோ அந்த மஹான்களுடைய வம்சத்தில் ஜனித்தவர்களும் அவர்களுடைய மஹிமையைக் கேழ்க்க வெறுப்பை அடைகிறார்கள். அவ்விதமான பரிபூர்ண தபஸ்ஸுடையவர்களாயிருந்து நிக்ரஹானுக்ரஹ சக்திவாய்ந்தவர்கள்தான் லோகநன்மைக்காகப் பாடுபட வேண்டும். எல்லோரும் பெரியோர்மாதிரியிருந்து க்ஷேமத்தை அடைவார்களாக.

சுபம்.　　　　　　பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஸு வைகாசி மீ ௨௦௳

வேதத்திற்கெதிரியாய் வரட்டுயுக்தி நிற்குமா?

வேதமென்பது சிறந்ததோர் பிரமாணமென்று பிராமணிகர் யாவரும் அங்கீகரித்த விஷயம். அனுமானமெனப்படும்யுக்தியும் ஓர் பிரமாணமல்லவா? என்று நினைத்து சிலர் அதை வேதத்திற்கெதிரியாய் விட்டுப்பார்க்கிறார்கள். மற்றுஞ்சிலர் வரட்டுயுக்தியையும் விடப்பார்க்கிறார்கள். யுக்தியென்பது அநுமானம் (ஒன்றை பின்பற்றி நிற்கும்-மானம்) ஆகையால் முன் நிற்பவன் இல்லாவிடில் தலையைக்கிளப்பமாட்டாது. அந்த நிலைமையில் வேதத்திற்கு எதிரியாகவா நிற்கப்போகிறது. அதினும் வரட்டுயுக்தி வந்து நிற்குமா? குயுக்திவாதிகள் பலர் சேர்ந்துக் கிளப்பிவிட்டாலும் தன் நிலைமை தெரியாமல் தலையெடுத்தாலும் வேதத்திற்கருகே வரும்போது தலை சோர்ந்துவிழுந்துவிடுமேயன்றி நிற்கவே மாட்டாது. ஸார்வபௌமனுக்கு எதிரில் ஸர்வதரித்திரன் எதிரியாய் வர முடியுமா? சில காலிகள் சேர்ந்து கிளப்பிவிட்டாலும் தன் சக்தி தெரியாமல் அந்த தரித்திரன் கிளம்பிவந்தாலும்ஸார்வபௌமனை கண்டமாத்திரத்தில் நடுநடுங்கி ஓர் மூலையில் பதுங்கிக் கிடப்பானேயன்றி எதிரில் வருவானா? ஸார்வபௌமனுடைய ஸாம்ராஜ்யத்தின் கீழ் படிந்து நடந்து அவனது ஆக்ஞையை எதிர்பார்த்து நிற்கும் ராஜவிசுவாஸமுள்ள பிரஜைகள்தான் இந்த தரித்திரனை சக்கிரவர்த்தியின் எதிரில் விடுவார்களா? விடவே மாட்டார்களல்லவா? அதுபோல வேதமென்னும் பிரமாணராஜன் ஸர்வபிராணிகளுக்கும் எல்லாவிதத்திலும் சிரேயஸ்ஸைக்கொடுக்கக் கூடிய ஸாதனங்களை விதித்து ஸகல ஜீவராசிகளையும் ஸம்ரக்ஷித்து வரும் ஸாம்ராஜ்யத்தில் குயுக்திவாதிகள் கிளப்பிவிட்ட வரட்டு யுக்திகளென்னும் காலிகள் அவன் எதிரில் வருவார்களா? ஸர்வபிரகாரத்தாலும் அந்தபிரமாண ராஜனையே பின்பற்றிநின்று அவனது ஆக்ஞையே பெரிதெனபாவித்து போதித்துவரும் ஸ்மி

ருதிபுராண இதிஹாஸாதிகள்தான் இந்த வாட்டுயுக்திகளை வேதத்தினெதிரில் விடுமா விடமாட்டாது. ஞானஸாத்விகர்களான தர்மபிரியர்கள் குயுக்திவாதிகள் காட்டிவிட்டவாட்டுயுக்தி வாதங்களை வைதிகஸித்தாந்தத்திற்கும்போட்டியாகவைத்துக்கொண்டுசிரேயஸாதனங்களை இழந்துவிடாமல் வேதம் விதித்ததுதான் நீடித்து நிலை பெருமென்று திடநம்பிக்கையுடனிருந்து அதையே அனுஷ்டித்து சிரேயஸ்ஸை அடையவேண்டும். யுக்திவாதம் நிலைக்காது. ஸூத்ரகாரரும் தர்க்கம் நிலைக்காதென்றார். இங்கோர் சிறு கதை உண்டு. அதாவது— ஹம்ஸபக்ஷியானது நீரையும் பாலையும் கலந்து வைத்தாலும் நீரை விலக்கி பாலைமாத்திரம் தனித்து எடுக்கும் கீர்த்தி வாய்ந்தென்று ஸாத்விகரான குரு சிஷ்யர்களுக்குப் போதித்தார். அது எப்படி எடுக்கிறது என்று சிஷ்யன்கேட்டதற்கு சிவன் செயல் அது என்றார். அது சிஷ்யர்களுக்கு சரியாகத் தோன்றவில்லை. அவ்வூரிலிருந்த் யுக்திவாதசாஸ்திரி ஒருவரிடம் சென்று இதைக் கேட்டார்கள். ஹம்ஸத்தின் மூக்கில் பிளிப்பு ரசமிருக்கிறது. பால்கலந்த நீரில் அந்த மூக்கைப் போடும்போது எலுமிச்சம்பழச்சார் சேர்ந்தபால் திரிந்துபோவதுபோல் அந்தப் பால் திரிந்துபோய் கட்டியாக மிதந்து விடுகிறது. அதை ஹம்ஸம் எடுத்துவிடுகிறது. நீர் மாத்திரம் மிஞ்சிப்போகிறது என்று யுக்திவாத சாஸ்திரி சொன்னார். அந்த யுக்திவாதம் அந்தப் பையன்களுக்கு மிகவும் பொருத்தமுடையதாகத் தோன்றிற்று. அதை ஆவலுடன் தங்களாசிரியரிடம் தெரிவித்தார்கள். அதற்கு அவ்வாசிரியர் ஹம்ஸத்தின் மூக்கில் புளிப்பு ரஸம் வருவதற்கு என்ன யுக்தியென்று கேட்டீர்களா? என்றார். கேட்கவில்லையேயெனவே, கேட்டுவரும்படி சொல்லச் சீஷர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு யுக்திவாத சாஸ்திரி திணரிப்போய் புளிப்பு ரஸத்திற்குக் காரணமான இரண்டுபூதங்களின் சேர்க்கை ஹம்ஸத்தின் மூக்கிலிருப்பதாகச் சொன்னார். இதைக்கேட்டு ஆசிரியரிடம்வந்துசொல்ல, அதற்கென்ன யுக்தி என்றார் ஆசிரியர். அதைக் கேழ்க்க யுக்திவாத சாஸ்திரியிடம் சிஷ்யர்கள் சென்றார்கள். அதைத்தவிர வேறு கேழ்வையானால் கேழ்க்கச்சொன்னார். இல்லை இல்லை. அதிலேயே ஒரு சிறிய ஆசங்கை. அதை மாத்திரம் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்தித்து அதையே கேட்டார்கள். அதற்கு வேறு ஒன்றும் சொல்லமுடியாமல்

ஸாத்துவிக குருசொன்னதையே சொன்னார். அதாவது "சிவன் செயலப்பா அது" என்றார். இதைக் கேட்டவுடன் சிஷ்யர்கள் இவ்வளவுதானா யுக்திவாதத்தின் போக்கு. இதைக்கேட்டு சிலர் மயங்குகிறார்களே. அது தப்பு என்று திடமாகத்தெரிந்துகொண்டு ஸாத்துவிக குரு சொல்வதே சரியெனத் துணிந்தார்கள். அதனால் யுக்திவாதம் நிலைக்காது. அதை நம்பி வைதிகவழியைவிட்டு விடாதீர்கள் ஆஸ்திக்யத்தையடைந்து வைதிகவழியையே பின்பற்றி க்ஷேமத்தை அடைவார்களாக.

பத்திராதிபர்

உபாகர்ம நிர்ணயம்.

உபாகர்மா அவசியம் அனுஷ்டிக்கவேண்டியதென சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதென்று கர்மாதிகாரம்பெற்ற யாவரும் அங்கீகரித்தும், அனுஷ்டித்துவருவதுமானதென்பது நிச்சயிக்கப்பட்டேயிருக்கிறது. அப்படியிருக்கையில் இப்பொழுது அதைப்பற்றி நிர்ணயிக்கவேண்டிய அவஸரமேது? என்று சிலர் நினைக்கலாம். அது சரியல்ல. சாஸ்திரங்களில் அதைப்பற்றிய முழுவிபரமும் ஒரே பிரகாரமாக நிச்சயிக்கப்பட்டிருப்பினும், அனுஷ்டிப்பவர்களின்புத்திஒருவிதமாயில்லாதபடியால்ஆங்காங்கு வெவ்வேறு பிரகாரமாகவே அனுஷ்டிக்கப்பட்டுவருகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதில் உபாகர்மாவின் முக்கிய கௌணகாலங்களில் அபிப்ராயபேதம் பலவிதப்பட்டிருக்கிறது. அவரவர்களும் தம்தம்அபிப்பிராயத்திற்கிணங்கசாஸ்திரவசநங்களை இழுக்கிறார்கள். அதிலும் யாஜுஷர்களின் உபாகர்மகாலம் தலைகெட்டநூலாயிருக்கிறது. ஆகவே உபாகர்மகாலம் ஒரேவிதமாயில்லாமற்போனதற்கு சாஸ்திரமே மூலமா? அல்லது புருஷபுத்திபேதம் மூலமா? என்ற ஸந்தேஹம் மந்தபுத்திகளுக்கு சில வருஷங்களாகத் தோன்றிக்கொண்டேயிருக்கின்றது. அந்தவருஷங்களிலும் பண்டித ஸபைகளில் ஒருவாறு நிச்சயிக்கப்பட்டு வந்திருப்பினும் அபிப்பிராயபேதம் ஜனங்களுக்கு மாறவில்லை. அதனால் இப்பொழுது அதைப்பற்றி நிர்ணயிக்கவேண்டிய அவஸரம் நேர்ந்தது. தோஷமற்றகாலத்திற்றான் உபாகரணம். வேதம்,

அனேக சாகையாய் பிரிபட்டிருப்பதாக பிரமாண வசனங்களி னின்று தெரிந்தபோதிலும் தற்காலம் 5-சாகைகள்தான் இருக் கின்றனவென்று ப்ரஸம்ப்ரபஞ்சாநந பாஞ்சன்ய கு. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்களால் பிரபையென்றும் தமது ஸ்மிருதி மூக்தா பல வியாக்கியானத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஐந்து சாகைகளுக்கும் 11-கிருஹ்ய ஸூத்திரங்களிருக்கின்றன. ரிக்சா கையில் இரண்டு கிருஹ்ய ஸூத்திரங்களும், சுக்கில யஜுஸ்ஸில் ஒன்றும், கிருஷ்ணயஜுஸ்ஸில் ஆறும், ஸாமத்தில் இரண்டும், ஆகப்பதினொன்று ஸூத்திரங்கள் தற்போது அனுஷ்டானத் திலிருந்துவருகின்றன. இந்த 11-ஸூத்திரங்களிலும் அந்தந்த ஸூத்திரக்காரர்களுக்குச் சில ஸம்ஸ்காரங்களும் ஔபாஸனுக்னி ஸாத்தியமான கர்மாக்களின் பிரயோகவிதியும் மற்றும் சிலதும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அதில் உபாகர்ம என்றதும் விதிக் கப்படுகின்றது. 11-ஸூத்திரக்காரர்களுக்கும் உபாகர்மகாலம் வெவ்வேருகவே படிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு ஸூத் திரத்துக்கும் ஒரே காலந்தான்என்பதும் கிடையாது. முக்கிய காலமொன்றும், கௌணகாலங்கள் அனேகங்களும் ஒவ்வொரு ஸூத்திரிகளுக்கும் ஸூத்திரக்காரர்களால் விதிக்கப்பட்டிருக் கின்றன. முக்கியகாலமொன்றைமாத்திரம் விதித்துவிட்டு வேறு காலத்தை எடுக்காத கிருஹ்ய ஸூத்திரமொன்றுமில்லை. எல்லா கிருஹ்ய ஸூத்திரங்களிலும் உபாகர்மத்திற்கு அனேககாலங்கள் விதிக்கப்படுவதாகத்தான் காணப்படுகின்றது. அப்படி இருக் கையில் சிலர் இந்த காலத்திற்றான் செய்யவேண்டுமென்று ஒரு காலத்தையே பிடிவாதமாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் காலாந்தரத்தை விதித்திருப்பது வீணேயாகும். தோஷமுள்ளகாலத்தில் செய்யக்கூடாதென்ற நிஷேதமும் அவர் களுக்கு வீண்தான். ஸூத்திரக்காரர்கள் அனேக காலங்களை விதித்திருப்பின் நோக்கத்தைக் கவனித்தால் முக்கிய காலத்திற் குத் தோஷம் வந்தால் அதிற் செய்யக்கூடாதென்றும், தோஷ மில்லாத கௌணகாலத்திற்றான் செய்யவேண்டுமென்றும் அபிப் பிராயமிருப்பதாகத் தெரிகிறது. தோஷமுள்ளகாலத்தில் செய் தால் அந்த தேசத்திற்கே கெடுதல் உண்டாகிறதென்று நிர்ணய ஸிந்துவில்—

अथ चेद्दोषसंयुक्ते पर्वणि स्यादुपाक्रिया ।
दुःखशोकामयग्रस्ता राष्ट्रे तस्मिन् द्विजातयः ॥

"தோஷமுள்ள பர்வாவில் உபாகர்மா நடந்தால் அந்த ராஜ்யத்திலுள்ள எல்லா துவிஜாதிகளுமே துக்கம், சோகம், வியாதி இவைகளால் பீடிக்கப்படுவார்கள்" என்பதாகக் கூறப்படுகின்றது. இதற்காகவேதான் மஹரிஷிகளும் ஒவ்வொரு ஸூத்திரிகளுக்கும் அனேக காலங்களை விதித்தனர்போலும். அதனால் முக்கிய காலத்திற்குத் தோஷம்வந்தால் தோஷமற்ற கௌண காலத்தில் செய்யட்டும். எக்காலங்களிலுமே தோஷம்வந்துவிட்டால் முக்கிய காலங்களிலேயே செய்யவேண்டுமென அவர்களுடையகருத்தாம். உதாரணமாக ஆபஸ்த்தம்ப ஸூத்திரிகளுக்கு முக்கிய காலமாகிய சிராவணிக்கு தோஷம்வந்தால் பிரௌஷ்டபதியிலும் அதற்கும் தோஷம்வந்தால் ஆஷாடியிலும் செய்யவேண்டும் என்று

प्रौष्ठपद्यामुपाकुर्याच्छ्रावणं दूषितं यदि ।
आषाढे वापि कर्तव्यं प्रौष्ठपद्याश्च दूषणे ॥

இந்த வசனம் கூறுகின்றது.

मासत्रयेऽपि दोषश्चेच्छ्रावण्यामेव कारयेत् ।

"மூன்று மாஸத்திலும் தோஷம் வந்துவிடுமாயின் சிராவணியிலேயே செய்யவேண்டும்" என்ற வசனம் மூன்றுமாஸத்திலும் தோஷம் நேரிடும்போது சிராவணியையே விதிக்கின்றது. இவ்வாறாக அனேக காலங்களை விதித்த மஹரிஷிகளின் கருத்து தோஷமற்றகாலத்தில் உபாகர்மத்தைச் செய்யவேண்டுமென்பதாகத் தெரிகிறது.

(2) தோஷம்பார்ப்பது எல்லா உபாகர்மாவுக்குமா? பிரதமோபாகரணத்திற்கு மாத்திரமா?

இங்கு சிலர்— பிரதமோபாகரணத்திற்குத்தான் தோஷம் பார்க்கவேணும். மற்ற 2-வது முதலிய உபாகரணங்களுக்கு தோஷம் பார்க்கவேண்டியதில்லையென்பார்கள். உபனயனம் செய்த வருஷத்தில் உபாகர்மகாலத்தில் செய்யப்படும் உபாகர்மம் பிரதமோபாகர்மமெனப்படும். அதற்கடுத்த வருஷம் முதற்கொண்டு செய்யப்படுவது துவிதீயாதி உபாகர்மமாகும். உபன

யனம் செய்யப்பட்ட பையனுக்கு முதல்முதலாக வேதாரம்பம் செய்யப்படுவதால் அது தோஷமில்லாத காலத்தில் செய்யப்பட வேண்டுமென்பது உசிதமேயாகும். இரண்டாவது முதலிய தடவைகளில் தோஷம்பார்க்கவேண்டுமென்பது அவசியமாகத் தோன்றவில்லை. அன்றியும்—

प्रथमोपाकृतिर्नस्यात् कुर्याच्चेत्स विनश्यति ॥

"துஷ்டகாலத்தில் பிரதமோபாகாரணம் கூடாது. செய்தால் அந்தப்பையன் நசித்துவிடுவான்" என்று குறிப்பிட்டுக் கூறியிருப்பதால் தோஷமுள்ளகாலத்தில் பிரதமோபாகரணத்தைத்தான் செய்யக்கூடாதெனத் தோன்றுகிறது. இப்படிக் குறிப்பிட்டு எடுக்காமல் பொதுவாக उपाकर्म नकर्तव्यं என்று உபாகர்மஸாமான்யத்தைநிஷேதித்திருந்தாலும் அந்த விசேஷ வசனத்தை அனுஸரித்து அதுவும் பிரதமோபாகரணவிஷயமென்று கூறிவிடலாமென்று சொல்லுவார்கள். அது யுக்தமன்று. ஏனெனில் கூறுவாம். தென்னாட்டு ஸ்மார்த்தர் அனைவரும் வைத்யனாத தீக்ஷிதீய நிபந்தனத்தையே அனுஷ்டான விஷயத்தில் பிரமாணமாகவைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் நிர்ணய ஸிந்து முதலிய நிபந்தனங்களிலும் "மலமாஸமுதலிய தோஷமுள்ள சமயத்தில் சுபத்தை விரும்புகின்ற பழைய புதிய பிரம்மசாரிகளும் கிருஹஸ்தர்களும் செய்யவேண்டிய உபாகர்மா ஸாமான்யத்தைச் செய்யக்கூடாது" என்று வஸிஷ்டாதி வசனத்தால் ஸாமான்ய நிஷேதமும், प्रथमोपाकृतिर्नस्यात् என்று விருத்த மனு வசனத்தால் விசேஷ நிஷேதமும் தோன்றுகிறது. இங்கு ஒரு சாஸ்திரஸங்கேதமுண்டு. அதாவது விதியால் நிஷேதத்திற்கும் நிஷேதத்தால் விதிக்கும், விதியாலேயே விதிக்கும் ஸங்கோசம் செய்யப்படலாம். அதாவது "ஸர்வப்பிராணிஹிம்ஸை கூடாது" என்ற நிஷேதத்திற்கு "அக்னிஷ்டோமயாகத்திற்குரிய பசுவை ஹிம்ஸிக்கலாம்,, என்ற விதிவாக்கியத்தால் "ஸர்வப்பிராணி ஹிம்ஸையைச் செய்யக்கூடாது என்றதை ஸங்கோசப்படுத்தி அக்னிஷ்டோமத்திற்குரிய பசுவைத் தவிர மற்ற பிராணிகளை ஹிம்ஸிக்கக்கூடாது" என்று ஸங்கோசம் செய்யப்படுகிறது. कालयोर्भोजनं ஒரு தினத்தில பகல் இரவு இரண்டுவேளை சாப்பிடலாம்" என்ற விதிக்கு दर्शे नक्तं नभुंजीत அமாவாஸ்யையன்று

இரவில் சாப்பிடக்கூடாது" என்ற நிஷேதத்தால் அமாவாஸ்யா தினந்தவிர மற்றநாளில் இரண்டுவேளை சாப்பிடலாமென்று ஸங்கோசம் செய்யப்படுகிறது. இங்கு அமாவாஸ்யை என்பது இரவில் போஜன நிஷேத தினங்களையெல்லாம் குறிக்கும். "பிராமணர்களுக்கெல்லாம் தயிர்போடவேண்டியது" என்ற விதிக்கு "கௌண்டின்யனுக்கு மோர்போடவேணும்" என்றவிதியினால் கௌண்டின்யனைத் தவிர மற்ற பிராம்மணர்க்குத் தயிர்போடவேண்டியது என்று ஸங்கோசம்செய்யப்படுகிறது. இதுபோல் ஒரு நிஷேதத்தால் மற்றொரு நிஷேதத்திற்கு ஸங்கோசம் செய்வதில்லை. அதாவது "பிராமணஜாதியாரைக் கொல்லக்கூடாது" என்ற ஸாமான்ய நிஷேதத்திற்கு "ஆத்ரேயனைக் கொல்லக்கூடாது" என்ற விசேடநிஷேதத்தால் ஸங்கோசம் செய்வதில்லை. செய்தால் பிராமணஜாதியார் என்ற பொதுவான சப்தம் ஆத்ரேயப் பிராமணனைக் குறிக்கும். அப்படியானால் "ஆத்ரேயப் பிராமணனைத்தான் கொல்லக்கூடாது. கொன்றால்தான் தோஷம். மற்ற பிராமணஜாதியானைக்கொன்றால் தோஷமில்லை" என்று அநிஷ்டம் வரும். அது வாராமலிருக்க இரண்டு நிஷேதம் வந்தவிடத்தில் ஸாமான்ய நிஷேதத்தாலேயே விசேஷ நிஷேதமும் கிடைக்கும்பொழுது தனியாக விசேஷநிஷேதம் செய்திருப்பதற்கு அதிகதோஷமென்று பொருள்படுத்தவேண்டும். அதுபோலவே மலமாஸாதி தோஷங்களில்உபாகர்ம ஸமான்யத்தைநிஷேதித்திருப்பதாலேயே உபாகர்மவிசேஷமான பிரதமோபாகாரணமும் செய்யக்கூடாதென்று கிடைக்கும்பொழுதும் மீண்டும் அதைக்குறிப்பிட்டுநிஷேதித்திருப்பதற்கு மலமாஸாதிகளில் பிரதமோகரணத்தைச் செய்தால் அதிக தோஷமுண்டு என்று பொருள்கொள்ளவேண்டும். விசேஷ நிஷேதத்தை அனுஸரித்து ஸாமான்ய நிஷேதத்திற்கும் விசேஷ நிஷேதத்தில்தான் தாத்பர்யமென்று கற்பித்தால் பிராம்மண ஸாமான்ய ஹிம்ஸா நிஷேதத்திற்கும் ஆத்திரேயப் பிராமண ஹிம்ஸா நிஷேதபரமாகப் பொருள்கொண்டு ஆத்ரேயனைத் தவிர மற்றவர் ஹிம்ஸையில் தோஷமில்லையென்றுவரும். அது ஸரியல்லவென்று கீழே கூறிவிட்டோம். இதுபோல் உபாகர்ம ஸாமான்ய நிஷேதத்தையும் பிரதமோபாகர்மபரமாகக்கொண்டு மலமாஸாதி தோஷமுள்ளகாலத்தில் பிரதமோபாகர்மாவைமாத்திரம் விலக்கி மற்ற த்விதீயாதி உபாகர்மாவைச் செய்தால்

अथ चेद्दोषसंयुते என்ற வசனத்திற் சொல்லியபடி தேசத்திற்கே கெடுதியுண்டாகும். அதனால் ஸாமான்ய நிஷேதம் இருக்கும் பொழுதே விசேஷ நிஷேதம் போட்டிருப்பது அதிக தோஷத்தை விளைவிக்கும என்ற கருத்தாலாம், என்றுதான் கொள்ளவேண்டும்.

(3) அந்த தோஷங்கள் எவை?

அந்த தோஷங்கள் வஸிஷ்டாதி வசனங்களில் கூறப்படு கின்றன — அவையாவன— மலமாஸம், ஜனனாசௌசம், மரணா சௌசம், சூர்யசந்திரக்கிரஹணம், ஸங்கிரமணம், குரு—சுக்கிரன் இவர்களுடைய மௌட்டியம், பால்யம், வார்த்தக்கியம், முதலிய வைகளாம். இதில் பிடிவாதக்காரர்கள் ஜனனாசௌசம், மரணா சௌசம், வந்த ஸமயத்திலும் உபாகர்மா பிராப்தமானால் செய்யத் தான் வேணுமென்று பிடிவாதம் பிடிப்பதில்லை. மற்ற தோஷங் களினால் கட்டாயம் செய்துவிடவேண்டுமெனச்சொல்லுகிறார்கள். அனேக தோஷங்களைப்பிடித்து அவைகளெல்லாவற்றிலும் உபா கர்மாவைச் செய்யக்கூடாதென்று நிஷேதித்திருக்கையில் சில தோஷங்களானால் தேவலை—ஸூதகாதிகளானால் கூடாது என்ற விசேஷம் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டதோ தெரியவில்லை. ஸூத காதிகளால்எப்படிசெய்யக்கூடாதோ? அப்படிமலமாஸாதிகளிலும் செய்யக்கூடாது என்று சொல்லுவதுதான் ஸஹபடிதநியாயத்திற் கொத்ததாகும். ஸஹபடிதங்களானாலும் அதாவது சேர்ந்து படிக்கப்பட்டிருந்தாலும் விபாகித்து விநியோகப்படுத்திக்கொள்ள லாமேயென்பது அப்படிப் போதிக்கின்ற பிரமாண மில்லாத விடத்தில் முடியாது. மல மாஸாதிகளானால் குற்றமில்லை. ஸூத காதிகளானால் கூடாது என்று விபாகித்து விநியோகிக்கும் பிர மாணமொன்றும் உபாகர்மப் பிரகரணத்தில் காட்டப்படவில்லை. ஆகையால் அந்த தோஷங்களில் தாரதம்மியம் கற்பிக்கவிடமில்லை. இந்த தோஷங்கள் படித்திருக்கிறதைப் பார்த்தால் இவை பிரத மோபாகர்மவை நிஷேதிப்பதாகவும் சொல்லமுடியாது. ஏனெனில் இந்த தோஷங்களுள் ஆசௌசத்தையும் சேர்த்திருக்கிறது. அதில் பிரதமோபாகரணம் செய்துகொள்ளவேண்டி பிரம்மசாரிப் பையனுக்கு ஒருஸமயம் மாதாபிதிருமரணப்ரயுக்தமான மரணா சௌசம் ஸம்பவிக்குமானாலும் ஜனனாசௌசம் ஸம்பவிக்க இட

மேயில்லை. ஜனனசௌச ப்ரஸக்தியுள்ள கிரஹஸ்த விஷயத்திற்றான் இந்த நிஷேதத்திற்கு அவகாசமுண்டு. அவர்கள் செய்து கொள்வது பிரதமோ பாகர்மமல்ல. துவிதீயாதி உபாகர்மமே ஆகையால் ஜனன சௌசத்தோடு சேர்த்துப் படிக்கப்பட்ட மலமாஸாதிகளும் துவிதீயாதி உபாகர்ம நிஷேதகமென்றே கொள்ள வேண்டும். ஸூதகம் மாத்திரம் துவிதீயாதி உபாகர்மநிஷேதகம், மற்றவையெல்லாம் பிரதமோபாகர்ம நிஷேதகம் என்று பிரிப்பதற்குப் பிரமாணமில்லை. சுமார் 60 வருஷங்களுக்கு முன் ஆண்டார்நல்லூர் கிராமத்திலிருந்து ஒரு பெரியார் இந்த ஸந்தேகத்தை மன்னார்குடியில் விளங்கிவந்த பெரிய சாஸ்திரிகளவாள் அவாளிடம் கேட்டதற்கு ஸூதகத்தோடு சேர்த்துப் படித்திருப்பதால் இந்த தோஷங்கள் பிரதமோ பாகர்ம விஷயமென்று ஒதுக்குவதற்கில்லையென்றும், அதனால் மலமாஸாதி தோஷமுள்ள காலத்தில் துவதீயாதி உபாகர்மாவையும் செய்யக்கூடாது. தோஷமில்லாதகாலத்திற்றான்செய்யவேண்டுமென்றும்சொன்னார்களாம். ஆகையால் மலமாஸாதி தோஷமில்லாத காலத்திற்றான் எல்லா ஸூத்திரிகளும் உபாகர்மாவைச் செய்யவேண்டும். பிரதமோபாகர்மம் துவிதீயாதி உபாபகர்மம் என்ற வித்தியாஸம் கிடையாது. ஆனால் ஒரு விசேஷமுண்டு. அதாவது—உபாகர்ம காலங்கள் எல்லாம் தோஷமுள்ளவைகளாயின் முக்கிய காலத்தில் எல்லா உபாகர்மாவைச் செய்யவேண்டும். பிரதமோபாகாணத்திற்கு சாந்திசெய்து செய்யவேண்டும். இதுதான் வைத்தியநாத தீக்ஷிதர் அவர்களால் உபாகர்மப் பிரகாணத்தில் நிரூபிக்கப்பட்டது. இதில் ஏதேனும் மாறுதல் இருந்தால் பண்டிதர்கள் பிரமாணமூலமாகத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுப்பிரமணியன்.

ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்.

ஆங்கீரஸ-ஹு சித்திரை-மீ 28௳ ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவதினத்தில் சிதம்பரம் குருவய்யர் அக்ரகாரத்தில் காலையில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுக்கு ஷோடசோபசார பூஜை பாராயணங்

களும் பகலில் விசேஷ பிராம்மண போஜனங்களும் மாலை 3 மணி முதல் பிரும்மஸ்ரீ ராஜா சோமசேகர தீக்ஷிதர் அவர்களால் ஆத்ம ஜ்ஞானம், என்ற விஷயோபந்யாஸமும் பிரும்மஸ்ரீ பென்ஷன் சப்மாஜிஸ்ரேட் ராமசாஸ்திரிகள் அவர்களால் "ஸ்ரீ சங்கரசரிதம்" என்ற விஷயோபந்யாஸமும் பிரும்மஸ்ரீ ஸி. எஸ். சிவகாமசுந்தர தீக்ஷிதர் அவர்களால் "கர்மயோகம்" ஈச்வர ஆராதனம், என்ற விஷயோபந்யாஸமும் இரவு பஜனை வீதிப்ரதக்ஷிணமகோத்ஸவமும் மிகச் சிறப்பாக நடந்தன, அன்று கீழரதவீதி மெ. செ. வித்யாலயத்திலும் புதுத்தெருவு வேதாபாராயண மடத்திலும் ஸ்ரீ சங்கரபகவத்பாத விசேஷ பூஜைகளும் பிரும்மஸ்ரீ உபய சிரோமணி சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் நாராயண சாஸ்திரிகள் முதலான பண்டிதமணிகளுடைய திவ்யோபந்யாஸங்களும் மிகச் சிறப்பாக நடந்தன. பூஜ்யர்களுடைய பூஜையானது புகழுக்கும் புண்யத்திற்கும் காரணமல்லவா. இப்படிக்கு

ஸ்ரீ சிதம்பரவாஸி ஸ்ரீ சங்கரபக்தன்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(400-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவர்களுக்குள் லக்ஷ்மிக்குக் கீழே ஹிரண்யகர்ப்பர். அதாவது பிரும்மா ஒருவர்தான் உயர்ந்த முக்திக்கு யோக்யமாயுள்ளவர். அவர் முதல் அதிகாரி. அதற்குக்கீழே சிவன் உள்பட ஸகலமான தேவ ஜீவர்களும் மத்யமமான முக்திக்கு உரியவர்கள். அவர்கள் இரண்டாவது அதிகாரிகள். மனுஷ்யர்கள் அதமமான முக்திக்கு உரியவர்கள். அவர்கள் மூன்றாவது அதிகாரிகள், ஆக மூன்றுவித அதிகாரிகள், அவர்களுக்கும் அவாந்தரமான பலவித வித்யாஸமுண்டு. இவ்விதம் ஜீவர்களுக்குள் அவவர்களின் அனுதியாய் இயற்கையில் அமைந்த யோக்யதை, பக்தி இவைகளைப் பொறுத்து அதிகாரி பேதம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்ற ஒருவராலும் முடியாது. தலையில் எழுதினதை யாரால் மாற்றமுடியும்? பகவானுல்கூட முடியாது. அவ்வித அதிகாரிக்குள் பிரும்மாவானவர் உயர்ந்த அதிகாரியானதால்

உயர்ந்த முக்தியை அடையவேண்டியவராதலால் உபனிஷத்துக் களில் கூறிய தஹரவித்யை சாண்டில்யவித்யை முதலியது களிலும் கர்மகாண்டத்திலுள்ள ஆக்னேயம் ஸௌர்யம் முதலிய ஸூக்தங்களிலும் எல்லா சாகைகளிலும் சொல்லப்பட்ட பகவானு டைய ஸம்ஸ்தகல்யாண குணங்களையும் பாக்கியில்லாமல் ஒன் ருகச்சேர்த்துக் கோர்த்துப் பகவானை உபாஸிக்க அதிகாரியா கின்ருர்; மற்ற சிவன்முதல் நம்பள் பர்யந்தமான எல்லா அதி காரிகளும் அவவர்களுக்கும் எந்தெந்த முக்தியை அடைவதற்கு அனுதியோக்யதையை அனுஸரித்து அவர்களின் தலையெழுத்துப் படி அதிகாரமுண்டோ அந்தந்த முக்திக்கு அனுகுணமாக எந் தெந்த குணங்களை வேதத்தில் மூலைக்கு மூலையாய்ச் சிதறியிருப் பதைப் பொறுக்கிச்சேர்த்து உபாஸிக்கவேண்டுமோ அவ்விதம் பகவானை உபாஸித்து அந்தந்த முக்தியை அடையவேண்டும். நம்மைப்போலொத்த அதிகாரிகளுக்கு நமக்கு ஏற்படப்போகும் முக்தியும் அதற்கு உபாஸிக்கவேண்டியகுணங்களும் தெரியாதே, அதைத் தெரிந்துகொள்ள ஸரியானபடி ஜ்யோதிஷம் படிக்க வேண்டுமே என்றல் பயப்படவேண்டாம். இருக்கார் எல்லாம் அறிந்த பெரிய ஜ்யோஸ்யரான மத்வாசார்யாள். இதற்காகவே அவர் ஸர்வஜ்ஞர் பூர்ணப்ரஜ்ஞர் என்பது முதலிய பிருதுகளைத் தாமே வைத்துக்கொண்டிருக்கிறர். அவரைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவ்விதம் உபாஸிக்கலாம். முதலில் அந்த மத்வர் எவ்வித முக்திக்கு எந்தெந்த குணங்களை உபாஸிப்பதற்கு அர்ஹர் என்று கேட்டால் பிறருக்கெல்லாம் வேண்டிய குணங்களைப் பொறுக்கிக்கொடுக்கும் சக்திவாய்ந்த அவருக்குத் தனது பாவி முக்தியும் அதற்குவேண்டிய குணங்களும் தெரியாமலிருக்குமா? தெரிந்தேயிருக்கும்.

शर्वादिसर्वगीर्वाण निर्वाणगतिहेतवः ।
पूर्णप्रज्ञपदांभोज रेणिवः पान्तु नस्सदा ॥

என்கிற சந்திரிகாப் பிரகாசருடைய சுலோகத்தின் கருத்துப்படி சிவன் முதலியவர்களுக்குக்கூட அவவர்களுக்குரிய முக்திக்குத் தகுந்த குணங்களை வேதங்களிலிருந்து பொறுக்கிக்கொடுத்து உதவி அவவர்களை முக்தியடையும்படி நமது ஆனந்ததீர்த்த பகவத்பாதாள் உபகரித்திருக்கிறர்கள். அப்படியிருக்குந் தனது

முக்தியும்தான் உபாஸிக்கவேண்டிய பகவத் குணங்களும் இன்ன தென்று தெரியாமலா நமது மத்வாசார்யாளுக்கு இருக்கும். அப்படியிருந்தால்

स्वयन्तरितुमक्षमः किमपरानसौ तारयेत् ॥

"தானே கரையேற வழிதெரியாதவன் பிறர்களை எவ்விதம் கரை ஏற்றுவான்" என்கிற நியாயமாயல்லவா முடியும். அப்படி இல்லை. சிவனையே கரையேற்றின மத்வரிடத்தில் நமக்கென்ன ஸந்தேஹம். ஆனால் ஸ்மார்த்தர்கள் சைவர்கள் யாராவது அவர் இடம் போனால் அவர் நீங்கள் ஸம்முக்தி யோக்யர்களன்று அந்த தமோலோகத்தில் அனுபவிக்கவேண்டிய அஸம்முக்திக்கு யோக்யர்கள் என்று தீர்மானமாகவே சொல்லிவிடுவார். அவரது சிஷ்யர்களைத்தான் ஸம்முக்தி யோக்யர்களென்று தீர்மானமாய்ச் சொல்லுவார். மத்வரைப்போல் ஸர்வக்ஞாயில்லாத மற்ற ஆசார்யாளிடம் போய் எனக்கு இனி எந்த முக்திவரும் அதற்கு வேண்டிய குணங்களை அந்த வேதராசியாகிய மூட்டையில் நாலா பக்கங்களிலும் கலந்து சிதறிக்கடப்பதைப்பொறுக்கிக்கொடுங்கள் என்று கேழ்க்கக்கூடாது. ஏனெனில் அவர்கள் மத்வரைப் போல் ஸர்வஜ்ஞர்களன்று ஜ்யோதிஷசாஸ்திரம் மத்வரைப்போல் படித்தவர்களன்று. அவர்கள் எதையாவது பொறுக்கிக் கொடுக்கட்டுமே அந்தப்படி உபாஸித்துப்பார்ப்போமே என்று சொல்லக் கூடாது. ஏனெனில் ஒருஸமயம் அவர்கள் குணாக்ஷர நியாயமாக நமக்குரிய முக்திக்குவேண்டிய குணங்களைக்கொடுத்து விட்டால் நமது நல்லகாலம்தான். அவ்விதமில்லாமல் அவர்கள் மாறி நமக்கு வரக்கூடாத முக்திக்குவேண்டிய குணங்களைப் பொறுக்கி இதுகளை நீங்கள் உபாஸியுங்கள் என்று கொடுத்து விட்டால் அவற்றை நாமும் உபாஸித்தோமானால் வேறு வினை வேண்டாம். பயனில்லாமல் போகிறதோடு நிற்காமல் மீளாத அனர்த்தங்களையும் ஸ்மார்த்தங்களைப்போல் சைவர்களைப்போல் அனுபவிக்கும்படி நேரிடும் ஆகையால் மத்வரைப்போல் ஸர்வஜ்ஞரான ஆசார்யாள் அகப்பட்டால் பாதகமில்லை. இல்லாமல் போனால் வேதங்களையும் அவற்றில் சொல்லியிருக்கும் பகவத் குணங்களையும் கட்டி தூரத்தில் போட்டுவிட்டு ஆஹார வியவஹாரத்தோடு இருப்பது தேவலை. அனுவச்யமாக உபத்ரவத்தை யாராவது விலைக்கு வாங்குவார்களா? ஸரியான வைத்யரில்லாத

இடத்தில் நீர்வாளக் கொட்டையைச் சாப்பிட்டுவிட்டு உபத்ரவப் படுவது யார். நாம் தேடிப்பிடிக்கும் குருக்களிடத்திலும் முதலில் அவர்கள் தமக்கு வேண்டிய குணங்களைத்தெரிந்து கொண்டு உபாஸிக்கிறார்களா. அவர்கள் எந்த முக்தியை அடையப் போகிறார்கள் என்று தெரிந்துகொண்டு பிறகு நமக்கு வேண்டிய குணங்களையும் நாம் அடையப்போகும் முக்தியின்மஹிமையையும் அவர்கள் மூலம் விசாரிக்கவேண்டும், இல்லாதபோனால்

स्वयन्नष्टः परानपि नाशयति ।

“தான் கெட்டதுமன்னியில் பிறரையும் கெடுக்கிறான்” என்கிற நியாயமாகக் குரு சிஷ்யன் இருவரும் கெட்டுப்போகும்படி நேரிடும். சில குருக்கள் சிஷ்யனைக்கெடுக்க எண்ணி தனக்கு வரும் முக்தி முதலியது தெரியாததால் வேறுவிதமாக உபாஸித்தால அனர்த்தம் வந்துவிடுமோ என்று பயந்துதான் ஒரு குணங்களையும் உபாஸிக்காது போஜனாதிகளைமாத்திரம் நடத்திக் கொண்டு உபாஸிப்பதுபோல் அபினயம்செய்துவிட்டுப் பிறருக்கு இந்த குணங்களை உபாஸியுங்கள் நான் ஸர்வஜ்ஞன் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி ஏமாத்தி ஏதையாவது குணங் களை எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். பிறகு சிஷ்யன்பாடு ஆபத்துத்தான். ஆகையால் ஒரு குணங்களையும் உபாஸிக்காது போஜனாதி வியவஹாரத்தில் ஈடுபடுவதே மிகவும் மேலானது. ஆகையால் உள்ளபடி ஸர்வஜ்ஞரான விசுவாஸமுள்ள குருக் களிடத்திலேயே போய் விசாரித்துத்தெரிந்துகொள்ளவேண்டும். இன்னொரு முக்யமானவிஷயம். முதல் முதல் மனுஷ்யன் தான் முக்தியோக்யனா என்று தீர்மானித்துக்கொண்டு பிறகு உபா ஸனத்திற்குப் பிரவிருத்திக்கவேண்டும். இல்லாமல் போனால் ஸ்மார்த்தர் முதலியவர்களைப்போல் முக்தி யோக்யனாயில்லாத பக்ஷத்தில் வீண் பிரயாஸப்படுவானேன். வேறு கார்யங்களைப் பார்க்கலாமே. பிரவிருத்தித்து அதிக உபத்ரவத்தையும் அடைய வேண்டாமே. உபாஸிக்கப்படும் குணங்களின் ஏற்றம் குறை விற்குத்தகுந்தபடியே முக்தியிலும் பல தாரதம்யம் ஏற்படும். அதிக பலம் வேண்டுமென்று ஆசைப்பட்டுத் தனக்கு யோக்யம் இல்லாத அதிக குணங்களை உபாஸித்து உபத்ரவத்தை இழுத்து விட்டுக்கொள்ளக்கூடாது ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். எள்ளளவு தவறிவிட்டால் அதிக அனர்த்தங்கள் ஏற்பட்டுவிடும்.

கத்திமுனையில் பழகுவதுபோல் ஜாக்ரதையாகப் பழகவேண்டும். இல்லாதபோனால் ஸ்வய மர்யாதைக்ககூஷியில் சேர்ந்துவிடுவது ரொம்பவும் உத்தமம். ஸாலோக்யம் ஸாமீப்யம் ஸாரூப்யம் ஸாயுஜ்யம் என்று நான்குவித முக்திகளுள் மேலானது ஸாயுஜ்ய முக்தி என்றால்

> हरौ नियतचित्तत्वाद्ग्रहवत्तत्प्रवेशनात् ।
> मोक्षं तादात्म्यमित्याहुर्नतु तद्रूपतः क्वचित् ॥

"பகவானிடத்திலேயே எப்பொழுதும் மனது சென்றிருப்பதால் பிசாசு முதலியதைப்போல் பகவானுடைய சரீரத்தில் புகுந்து கொண்டிருப்பதே ஸாயுஜ்யம் என்பது. பகவானுகவே ஆய்விடுவது ஸாயுஜ்யமன்று" என்று மத்வஸ்ம்ருதி கூறியிருக்கும்பிரகாரமாக பகவானுடைய சித்ரூபமான சரீரத்தில் பிசாசங்களைப் போல் பிரவேசித்துவிடுவதே. இவ்விதம் உயர்ந்த ஸாயுஜ்ய மோக்ஷம் தேவர்களுக்குத்தான் கிடைக்கும். மனுஷ்யர்கள் ஆசைப்படுவதில் பிரயோஜனமில்லை. அப்படி ஆசைப்பட்டுவிட்டால் அதோகதிதான். அப்படித் தனக்கு உசிதமில்லாத பதங்களை ஆசைப்படுபவர்களை மிகவும் கருணாமூர்த்தியான பகவான் மீளாத நரகத்தில் தள்ளிக் கெடுத்துவிடுவார். வீணுக மனுஷ்யர்கள் கெட்டுப்போகவேண்டாம். மத்வர் சொல்லிவிட்டார். இனி யாவது உஷாராயிருங்கள்.

இவ்விதம் ஸாயுஜ்யமுக்தியை அடைந்த தேவர்களெல்லாரும் பகவானுடைய சரீரத்தில் பிசாசுகளைப்போல் புகுந்துகொண்டு

> आदत्ते हरिहस्तेन हरिदृष्ट्यैव पश्यति ।
> गच्छेच्च हरिपादेन मुक्तस्यैषा स्थितिर्भवेत् ॥

"முக்தனுயுள்ளவன் பகவானுடைய கரத்தாலேயே கிரஹிக்கின்றான். பகவானுடைய கண்ணால் பார்க்கிறான். பகவானுடைய பாதத்தால் நடக்கிறான். இவ்விதம் முக்தனுடைய நிலை" என்று மத்வஸ்ம்ருதிகூறும்விதமாகப் பகவானுடைய சரீரம் இந்திரியம் முதலியவைகளால் பகவான் அனுபவிக்கும் போகங்களையே அனுபவிக்கின்றார்கள். பகவானுடைய சரீரத்தில் பிசாசுகளைப் புகுவதிலும் விசேஷமுண்டு. என்னவென்றால் அந்தந்த தேவர்

களும் தாம் நேரில் பகவானுடைய சரீரத்தில் பிரவேசிக்காமலே அவர்களுக்கு மேல்பட்ட தேவர்களது சரீரத்தில் முதலில் பிசாசு போல் பிரவேசிக்கிறார்கள். பிறகு மேல்பட்ட தேவர்கள் அவர்களுக்கு மேல்பட்டவர்களிடத்தில்பிரவேசிக்கின்றார்கள் இவ்விதம் சிவனுடைய சரீரத்தில் வரிசையாக எல்லாரும் பிரவேசிப்பார்கள். அப்படிப் பிரவேசித்த பிறகு எல்லா தேவர்களோடுகூடச் சிவன் தனக்குமேல்பட்ட பிரும்மாவின் சரீரத்தில் பிசாசுகளைப்போல் பிரவேசிக்கவேண்டும். பிறகு பிரும்மா எல்லாரோடுகூட பகவான் உடைய சரீரத்தில் பிரவேசிப்பார். இதன் மத்தியில் எல்லாருக்கும் மேலான லக்ஷ்மியின் சரீரத்தில் எல்லாரும் பிசாசுகளைப்போல் பூறுவார்களா என்கிற ஸந்தேஹத்தை மத்வர்தான் நிவிருத்திக்க வேண்டும். இதற்கும் ஏதாவது ஸமாதானம் மத்வர் வைத்திருப்பார். இவ்வளவு பிசாசுகள் பகவானுடைய சரீரத்தில் கூட்டம் கூட்டமாகப் பிரவேசித்துவிட்டால் பகவானுக்கு அதனால் உபத்ரவங்கள் ஏற்பட்டதா? பகவானுக்கு வேறுயார் மந்திரங்களை ஜபித்துப் பிசாசுகளை ஓட்டி ரக்ஷைகட்டி முடிகயர்போடுகிறது என்று கவலைப்படவேண்டாம். பகவான் எல்லா உபத்ரவங்களையும் ஸஹிப்பதற்குச் சக்தாயுள்ளவர். உண்மையில் அவருக்கு ஒருவித சிரமமும் கிடையாது. என்று அவரிடத்திலேயே நேரில் பாடம் கேட்டதாகச் சொல்லிக்கொள்ளும் மத்வாசார்யாள் நமக்குச் சொல்லிவிட்டார்கள். நமக்கு ஏன்கவலை மேலும் நாம் மனுஷ்யர்களாதலால் ஸாயுஜ்ய முக்தி நமக்கில்லாததால் பிசாசுகளைப்போல் நாம் பகவானுக்கு உபத்ரவத்தை உண்டுபண்ணப் போவதில்லை. ஏன் கவலை இவ்விதம் ஸாயுஜ்யமுக்தியை அடைந்த தேவர்கள் சில ஸமயங்களில் பகவானுடைய சரீரத்தில் பிரவேசிக்காமலே வெளியிலிருந்துகொண்டே பகவானைப்போல் சித்ரூபங்களாய்த் தங்களுக்கு இயற்கையில் அமைந்ததுகளும் ஆத்மஸ்வரூப பூதங்களும் சித்ரூபங்களாயுமுள்ள சரீரேந்திரியங்களால் ஸங்கல்ப மாத்திரத்தால் ஏற்பட்ட விஷயபோகங்களை அனுபவிப்பார்கள். அப்பொழுது பகவான் கொஞ்சம் விச்ராந்தியுடன் இருக்க அவகாசமுண்டு. பகவானுக்குக் கொஞ்சம் அதிருஷ்டம்தான்' அவ்வித தேவர்களுக்கு முன்போலவே முக்தியிலும் பிரும்மா இந்திரன் வருணன் சந்திரன் ஸூர்யன் முதலிய ஆதிகாரிக தேவதா பதவிகளும் அதை அனுஸரித்து உத்தமாதமபாவமும்,

பூஜிக்கப்படுவர். பூஜிக்கிறவர் என்பதுமுதலிய வியவஸ்தையும் அதனால் ஆனந்தம் ஜ்ஞானம் ஐசுவர்யம் விஷயபோகம் இவைகளில் தைத்திரீய உபனிஷத்தில் ஆனந்தவல்லியில் கூறியிருக்கும் பிரகாரமாக மேன்மேல் நூறுமடங்கு உத்கர்ஷமும் உண்டு.

தேவதைகளைத்தவிர மற்றமனுஷ்யாதிகளுக்கு ஸாலோக்யம் முதலிய மூன்று முக்திகள் அவர்களின் அதிகாரத்திற்குத் தக்கவாறு கிடைக்கும். ஸாயுஜ்யம் கிடையாது. அவர்கள் அதிகாரத்துக்குத்தக்கவாறுபூமிமுதலிய ஏழுலோகங்களிலுமுள்ள பகவானுடையஸ்தானங்களை அடைந்து அங்கு கர்மாவினால் ஆரம்பிக்கப்படாததும் தாங்கள் இச்சையினாலேயே ஏற்பட்டதுகளும் பிராகிருதங்களாயுமுள்ள பாஹ்யசரீரேந்திரியங்களாலோ அல்லது சித்ரூபங்களாய் ஆத்மஸ்வரூப பூதங்களான சரீரேந்திரியங்களாலோ தங்களுக்குரிய ஸாங்கல்பிக விஷயபோகங்களை அனுபவிப்பார்கள். அவர்களுக்கும் முன்போலவே மோக்ஷகாலத்திலும் வர்ணாச்ரமம் முதலிய பேதமும் ஜாதிபேதமும் அதை அனுஸரித்துப் பூஜ்யன் பூஜகன் என்பதுமுதலிய வியவஸ்தைகளும் ஜ்ஞானம் ஆனந்தம் ஐசுவர்யம் போகம் இவைகளில் தாரதம்யமும்உண்டு. தற்காலத்தில் சிலர் இந்த உலகத்திலேயே ஜாதிபேதம் வேண்டாமென்கிறார்களே. அவர்களுக்கு மோக்ஷத்தில்கூட ஜாதிபேதத்தை ஒப்புக்கொண்ட மத்வர்தான் பதில் சொல்லவேண்டும். முக்தியில் இவ்விதம் பல தாரதம்யமிருந்தாலும் முக்தர்களுக்கு ஒருவருக்கொருவர் துவேஷம் அஸூயை முதலிய துர்குணங்கள் இருக்காது. ஏனெனில் துவேஷம் முதலியது அந்தக் கரணதர்மமானதால் அந்தக்கரணம் முக்தியில் நசித்துவிட்டபடியால் என்க.

மனுஷ்யர்களிலும் கிருஹஸ்தர்களைவிட ஸந்யாஸிகளுக்கு மோக்ஷஸுகம் அதிகம் ஏனெனில் ஸந்யாஸிகள்கிருஹஸ்தர்களைப்போல் அதிகமாக விஷயஸுகங்களில் அகப்பட்டுக்கொள்ளாமல் நீண்டகாலம் பகவானை உபாஸித்திருக்கார்களல்லவா. ஆகையால் உழைப்பிற்குத் தக்கவாறு பலம்அதிகம் ஏற்படுவது உசிதமல்லவா.

ஸாதன தாரதம்யத்தால் ஸாத்யத்தில் தாரதம்யம் உண்டென்பது உலகப்பிரஸித்தம். ஆகையால் அவர்களின் பக்தி, கர்மம், உபாஸனம், உபாஸிக்கப்படும் குணங்கள், உபாஸனாகாலம்

முதலிய ஸாதனதாரதம்யத்தாலும் ஜ்ஞானம் வந்தபிறகும் செய்த கர்மம் முதலியதை அனுஸரித்தும் மோக்ஷகாலத்தில் செய்யப் படும் பக்தி உபாஸனம் இவைகளை அனுஸரித்தும் முக்தி ஸுகத் தில் தாரதம்யம் அவச்யம் உண்டு. தேவதைகளிலும் கூட வர் ணாச்ரமாசாரங்கள் மத்வமதத்தில் உண்டு. பகவானுடைய குணங் களில் சிற்சில குணங்கள் எல்லா அதிகாரிகளுமே உபாஸனம் செய்தேதீறவேண்டும் என்கிற நிர்ப்பந்தமுண்டு. அப்படியதை உபாஸிக்காமல்போனாலும் அனர்த்தம் வந்துவிடும். மோக்ஷத் திலும்கூட முக்தர்களுக்குக் கூலிகொடுத்து காப்பாற்றவேண்டிய வேலைக்காரர்கள் உண்டு. அவர்களைக் காப்பாற்றவேண்டும். அதற் காகப் பாடுபடவேண்டியதுமுண்டு. ஸம்பாதிக்கவேண்டியது உண்டு. இவ்விதம் மத்வமதத்தில் இந்த லோகத்தைப்போலவும் ஸ்வர்க்காதி லோகத்தைப்போலவும் மோக்ஷத்திலும் ஸகல வியவ ஹாரங்களும் உண்டு. வைகுண்டாதி லோகங்களையடைந்து மோக்ஷத்தை அநுபவிக்கவேண்டும். அங்கேயும் கழுதை குதிரை குரங்கு முதலிய பிராணிபேதங்களுண்டு.

ஆனால் வைகுண்டாதி லோகங்களிலுள்ள கழுதை குதிரை குரங்கு முதலிய பிராணிகள் இந்தலோகத்திலுள்ளதைக் காட்டி லும் உயர்ந்த பிராணிகளாயிருக்கலாம். அதுகளுக்கும் முக்தியில் துக்கங்கிடையாது. ஆனால் ஸுகத்தில் தாரதம்யமுண்டு. தோட்டி முதல் தொண்டமான் வரை வைகுந்தத்தில் உண்டு. அதிகமாக விஸ்தாரமாகக் கூறுவானேன் இந்தலோகத்திற்கும் வைகுண்டத் திற்கும் பேதமில்லை. அங்கு துக்கமில்லை என்கிற ஒரே விசேஷம் தான். மற்ற விசேஷம் ஒன்றுமில்லை. இதுதான் மத்வமதத்தில் மோக்ஷம். இவ்விதம் மத்வர் மோக்ஷநிலையை ரொம்பவும் சிர மப்பட்டுத் தனது ஆயுஸ்ஸைப் பூராவாகச் சிலவழித்துத் தன் இஷ்டப்படி ஒருமாதிரியாகக் கண்டுபிடித்து உலகத்தைக் கறை யேற்றுவதாகத் தனது புஸ்தகங்களிலுமதைக் கணக்கில்லாமல் எழுதி அதற்கனுகுணமாகப் பிரமாணங்களையும் தாராளமாகக் கல் பித்துத் தனக்கு வேண்டியவர்களுக்கு மோக்ஷமும், வேண்டாத வர்களுக்கு நாகமும் கல்பித்து ரொம்பவும் பாடுபட்டிருக்கிறார்.

இவ்வித மத்வமத மோக்ஷ மஹிமையைக் கண்டிக்கக் கொஞ் சமாவது பகுத்தறியும் புத்தியுள்ளவன்கூடப் பிரவிருத்திக்கமாட்

டான். பண்டிதர்கள் பிரவிருத்திக்கமாட்டார்களென்று கேழ்க்க வேண்டுமா? இதை லக்ஷ்யம்செய்து கண்டிக்கப் புறப்படுவதே புத்தியின் மாந்த்யத்தைக்காட்டும். ஆகையால்—

स्वरूपव्याख्यैव पराक्रिया ।

“ஸ்வரூபத்தைக் கூறுவதே நிராகரணம்” என்கிற நியாயப்படி இதன் நிரூபணமே இதற்கு நிராகரணம், என்று எண்ணி இத்துடன் உபஸம்ஹாரம் செய்துகொள்ளுகிறேன். இத்துடன் ஏழாவது ரஹஸ்யம் முடிந்துவிட்டது. இனி அவச்யம் சொல்லவேண்டிய சில விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் வெளியிடுகிறேன்.

சுபம்.

போலகம் ஸ்ரீ. ஸ்ரீ ராமசாஸ்திரிகள்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

பராசரர்.

1. வஸிஷ்டருடைய புத்ரர் சக்தி. சக்தியின் பிள்ளை பராசரர். இவர் தாயின் கருவில் இருக்கும்போதே வேதத்தை ஓதினார். தாதாவினிடமே வித்யை கற்றார். அவரையே அப்பா என்று நினைத்தார். இவர் தாய் அதிருச்யந்தீ. அவள் எதிரில் பராசரர் வஸிஷ்டரை அப்பா என்று கூப்பிட்டார். இதைக் கேட்டு அவர் தாய் அழுதாள்.

2. ஏன் அழுகிறாய் என்று இவர் கேட்டார். உன் அப்பாவை ராக்ஷஸன் கொன்றான், இவர் உன் பாட்டன் என்றாள் தாய். ஐயோ! எனக்கப்பா இல்லையா? அவரை ராக்ஷஸனா கொன்றான்? இந்த உலகையே யான் அழித்துவிடுகிறேன் என்றான் குழந்தை. வஸிஷ்டர் வந்தார். அவன் கோபத்தை நீக்க கதை ஒன்று சொன்னார்.

3. கிருதவீர்யன் என்றோர் அரசனிருந்தான். அவன் பார்க்கவ வம்சத்து ரிஷிகளுக்கு ஏராளமாக ஸ்வர்ணதானம் செய்தான். அவன் ஸ்வர்க்கம்சென்றான். அவன் ஸந்ததி ஏழையாய்விட்டது. இந்த ரிஷிகளிடம் பணமிருப்பதை அறிந்தனர். நயமாக சிலரிடமிருந்து தநத்தை அபஹரித்தனர். கொடுக்கமாட்டேனென்றவரைக் கொன்றனர்.

4. பார்க்கவவம்சத்தில் பெண்கள் பயந்தோடினர். ஹிமாலயஞ் சென்றனர். அங்கே ஒருவள் தன் துடையில் கர்ப்பத்தை வளர்த்தாள். அதை அறிந்த கார்த்தவீர்யர் அங்கே சென்றனர். அந்த கர்ப்பம் குழந்தையாகப் பிறந்தது. க்ஷத்திரியர் கண்கள் உடனே அவிந்தது. அவர்கள் ரிஷிபத்நியைச் சரணமடைந்தனர். அவள் ஊருவிலிருந்தவந்த ஔர்வனை வேண்டிக்கொள்ளுங்கள் என்றாள்.

5. அங்ஙனமே அவரைச்சரணமடைந்தனர். அவர் கண்ணைக் கொடுத்தார். அரசர்களும் ஊருக்குத் திரும்பினர். ஔர்வர் தன் பித்ருக்களுக்கு ஸந்தோஷத்தைச் செய்ய எண்ணினார். ஸகல உலகையுமழிக்க தவம் செய்தார். அவர் பிதிருக்கள் எதிரில் வந்தார்கள். குழந்தாய்! உலகை அழிக்காதே, கோபத்தை விடு, சாந்தனுயிரு என்று உபதேசித்தனர்.

6. ஔர்வன் அவர்சொல்லுக்கு இசைந்தான். கோபத்தை உள்ளே அடக்கமுடியவில்லையே! எங்கே இதைவிடுவது? என்று கேட்டான். ஸமுத்ரத்தில் விடுஎன்றனர். அப்படியே விட்டான். அதே பாடபாக்னி எனப்படுவது. அது குதிரைமுகங்கொண்டு ஜலத்தைக்குடிக்கிறது. ஔர்வன் கோபத்தை விட்டானல்லவா ? அதுபோல் நீயும் குரோதத்தை விடு என்று வஸிஷ்டர் பராசருக்குச் சொன்னார்.

7. அச்சயயம் அவர் கோபம் அடங்கியது. தந்தையைக் கொன்ற ராக்ஷஸரிடம் கோபம் வந்தது. அவர்களை அழிக்க ஓர் யாகம் செய்ய ஆரம்பித்தார். விதிவசத்தால் வஸிஷ்டரும் பேசா

மலிருந்துவிட்டார். பராசரர் கோபத்தினால் அக்னியைப்போல் ஜ்வலித்தார். அவரைக்கண்டு உலகம் நடுங்கிற்று. ஸப்தரிஷிகள் ஓடிவந்தனர். அவரில் புலஸ்த்யர் பராசரரைப் பார்த்துக்கூறினார்.

8. குழந்தாய்! நீ குசலமா? ராக்ஷஸவதத்தால் உனக்கு ஸந்தோஷமுண்டானதா? ஒருவனைக்கொல்ல (ஈசனுணையில்லாவிடில்) மற்றவனால் முடியுமா? அதிலும் உன் தந்தையைக் கொல்ல எவரால் முடியும்? அவர் மரணத்தை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. மநமிருந்தால் அந்த ராக்ஷஸனைக் கொல்வது அவருக்கு ப்ரயாஸமா ?

இவ்வுடல் அழிந்து வேறு தேஹம் வரட்டும் என்று அவரே மரணத்தைத் தேடிக்கொண்டார். ஒருவன் செய்த குற்றத்திற்காக பலரை அழிப்பது தர்மமா ? விச்வாமித்ரர் தூண்டுதலால் கல்மாஷபாதன் உடலில் ராக்ஷஸன் புகுந்தான். அவனே உன் பிதாவைக் கொன்றான். அவ்வரசனை உனது பாட்டனான வஸிஷ்டர் மன்னித்தார். அவனுக்கு உபதேசமும் செய்தார்.

10. அவ்வரசனும் ஸ்வர்க்கம் சென்றான். நீ யாருக்காக இந்த யாகம் செய்கிறாயோ அந்த உன் தந்தை ஸ்வர்க்கத்திலிருக்கிறார். வீணிலே நீ ஏன் பாபம் செய்கிறாய்? கோபத்தை விடு, சாந்தியைக் கைக்கொள். ராக்ஷஸர்களானாலும் ஜீவனைக்கொல்வது நியாயமா என்றார். வஸிஷ்டரும் அதை ஆமோதித்தார். பராசரர் யாகத்தை நிறுத்தினார்.

11. யாகத்தீயை ஹிமாலயத்தில் வடபாகத்தில் விட்டார். அது இன்றைக்கும் ராக்ஷஸர்களையும் கற்களையும் மரங்களையும் எரிக்கிறது. பராசரரைப்போல் பிதாவிடம் அன்பாயிரு. பெரியோர் சொற்படி நட.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

ஸப்தகன்னிகளின்லீலை. 18௳ மைமன்ஸிங் என்றவூரில் ஓர் படகோட்டி ஓர் ஆற்றைக்கடக்கும்போது ஸப்தகன்னிகைகள் எதிரிற்றோன்றி பிரதி ஸோமவாரமும் தங்கள் கோபத்தால் புயல் காற்றுதோன்றி உலகைப் பாதிக்கும் ஸோமவாரவ்ரதமிருப்பவருக்கு இத்துன்பம் வாராதென்றும் கூறினார்களாம். அதேபோல் புயல்தோன்றிற்று தர்மம் குறைந்தபோது பித்ருயாணத்திலுள்ள பெரியோர் பாரினில் தோன்றி இல்லறதர்மத்தை அநுஷ்டித்துக் காட்டுவர் என்றும் பாபிகள் வீட்டில் பிறவாரென்றும் சாஸ்திரங் கூறும் அதற்குபதிலாக இப்படி வருகிறார்களோ? என்று தோன்றலாம். பத்ரிகை இன்னொன்று கூறும் அதைமறுக்கும்! எப்படி ஆனாலும் ஸோம வாரவ்ருதத்தைப்பற்றி பலரறியநேர்ந்தது நல்லது

*　　*　　*　　*　　*　　*　　*

ஸ்ருஷ்டியில் மனிதநிலை, 24 25௳ சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் ஷ்டி விஷயமாக ஓர் அரிய உபன்யாஸம் நடந்தது. உபன்யாஸகர் நமது ஆர்யதர்மம் பத்திராதிபர் வேலூரிலும் காஞ்சியிலும் ஸ்ரீ மதாசார்யஜயந்தியை உத்தேசித்து பல அரிய உபன்யாஸங்களைச்செய்து இங்கு விஜயமானார். வர்ணாச்ரம தர்மத்தை வெகு அழகாகவும் மிக யுக்தி யுக்தமாகவும் சத்ருவும் அதை ஏற்கும்படி இயற்கையான சொற்சுவையுடனும் ரஸமாகவும் தர்மத்தை வற்புருத்தி உபன்யஸித்தார். மற்றும் பல பிரஸங்கம் நடவாதா என்று எல்லோரும் ஆசைப்படுகின்றனர். அது அன்னாரின் இயற்கை.

*　　*　　*　　*　　*　　*　　*

திருச்செந்தூரார் திருவிளையாடல். 25௳ திருச்செந்தூர் ஸுப்ரஹ்மண்யன் ஓர் பக்தரை ஸர்ப்பக்காவடி எடுக்கும்படி ஸ்வப்நத்தில் உத்தரவிட பக்தரும் படமெடுத்துவரும் நாகத்தை கட்டிக் காவடியெடுத்தாராம். இதைக்காண பல ஜனங்கள் கூடினாராம். காவடியால் ஆவதும் போவதும் அவனுக்கொன்றுமில்லையாயினும் அடியாரை ஆட்கொண்டு ஆதரிக்கும் அவனது லீலையே கவனிக்கத்தக்கது. நாஸ்திகருக்கு இங்ஙனம் பக்தி

ஊட்டலாகாதா என்று பல பக்தர் நினைப்பர். யார்யார் தன்னை எப்படி எப்படி உபாஸிக்கிறார்களோ அப்படியேதானருள் புரிவதாகக் கீதையில் பகவான் கூறியவண்ணம் பக்தருக்கே அவன் பல லீலைகளைக் காட்டுவான். இதைக் கண்டேனும் ஏனையோர் சித்தம் தெளியாதா?

* * * * * * *

ஸ்ரீநரஸிம்ம ஜயந்தி. 26உ குளித்தலை மணத்தட்டையில் 18உ ௸ ஜயந்தி மிக பக்திசிரத்தையுடன் கொண்டாடப்பட்டதாக விஷயம் வெளிவந்தது. பஜனை அன்னதானம் ஸதுபன்யாஸம் முதலியவைகள் நடந்தன. துஷ்டனைக்கொன்று பக்தனைக் காத்த பகவதவதாரத்தில் கிரியாசக்தி ப்ரதானமான இவ்வவதாரத்தைக் கொண்டாடுவது பக்தியை ஊட்டத்தக்க ஸாதனமாகும்,

* * * * * * *

லக்ஷ தீபம். 22உ வாலாஜாதாலுகா வேப்பூரில் வஸிஷ்டேச்வா ஆலயத்தில் ௸ வைபவம் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இதுபோன்ற வைபவங்கள் பகவத்கருணை சுறக்கக்காரணமாக இருப்பதுடன் பலருக்கும் பக்தியை ஊட்டும் ஓர் பிரசாரம்போலாகும், விஷயமறியாமல் வீண் செலவேன்? என்போரும் கோவிலிலா பகவானிருக்கிறார்? என்று கூறும்போலி வேதாந்திகளும் நேராக இதைத்தர்சித்தால் களங்கமகன்று ஸ[illegible]ஷமடைவர்.

* * * * * * *

இருவரும் வழிகாட்டுகின்றனர். கண்டமங்கலத்தில் வஸிக்கும் ஆஸ்திகர், திருக்காட்டுப்பள்ளி ஸப்ரிஜிஸ்தாரான ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளை அழைத்து ஸதுபன்யாஸம் செய்ய வேண்டினர். அன்னார் வர்ணாச்ரம தர்மத்தைக்குறித்து நன்றாக் உபன்யஸித்தார். பல துன்பம் நிறைந்த நமது வாழ்நாளில் நல் விஷயத்தைக்கேட்கும் காலமே நமது நல்ல காலமெனலாம். இவர் காட்டிய வழியை ஏனையவர் பின்பற்றுக.

* * * * * * *

லோகோபகாரி வாழ்க ! நம் நாடு தர்ம நாடு. நம் வாழ்வும் தர்ம வாழ்வே ! சிலரிதை அறியாவிடினும் பலர் வழக்கமென்று

காரணம்பற்றியாவது ஸ்மார்த்த கர்மங்களை அனுஷ்டிக்கின்றனர். யஜமானனுக்கேற்றபடியே உபாத்யாயர்களுமிருப்பதால் கர்மாக்களை அனுஷ்டிப்பதில் பல ஊழல்கள் நேருகின்றன. இந்நிலையில் ஸ்வரத்துடன் மந்த்ரங்களைப் ப்ரயோகத்தோடு அச்சிட்ட பூர்வாப ரப்ரயோகங்கள் மிக அவச்யமே! போதாயன ஆபஸ்தம்ப ஆச்வலாயனாதி ஸூத்ரங்களுக்கிணங்கி பூர்வாபரப்ரயோகத்தை அச்சிட்ட பிரும்மஸ்ரீ மணக்கால் முத்து ச்ரௌதிகள் மிகவிரளயான ஆஹிதாக்னி அபரப்ரயோகத்தையும் அச்சிட்டிருக்கிறார். இவ்விஷயத்தில் பேருபகாரம் செய்தவரைப் போற்றாமலிருக்கமுடியாது. இதில் இவரை ஏவிய ஸ்ரீவாஸுதேவயதீந்த்ராள் ஸங்கல்பம் பூர்த்தியானது,

* * * * * * *

ஸ்ரீசங்கரஜயந்தி. விரிஞ்சிபுரத்திலும் மாயவரத்திலும் ஜயந்தி விஸ்தாரமாக நடந்தது. மாயவரத்தில் சங்கீதமே எல்லாவற்றையும் விட மேலாக இருந்தது. எப்படியோ அவரை அழைத்து ஆசார்ய தர்சனம் செய்யும்படி செய்தவரை அவர்களைக் கொண்டாடுகிறோம். பரமாசார்யாளது அவதாரம் அவாள் நமக்காகச் செய்த நற்காரியம் முதலியவைகளைப் பலரறியும்படி செய்தல் மிக நலம்.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவ சர்மா.

வாழ்கவந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.